## கொடைக்கானல் நகராட்சி

1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அட்டவணை III-ன் பிரிவு 2-ன் கீழ் 27.06.2024 ஆம் நாள் வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

நாள். 24.06.2024

**பொருள் எண் – 1)**

கொடைக்கானல் நகராட்சியில் முதலமைச்சர் காலை சிற்றுண்டி திட்டம் ஆனந்தகிரி 4வது தெருவில் கட்டப்பட்டுள்ள புதிய சமையற்கூடத்தில் 14.06.2023 முதல் காலை சிற்றுண்டி தயாரித்து வழங்குவதற்கு M/s Karishma Trading Corporation, Madurai நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சிக்குட்பட்ட (1) சீனிவாசபுரம் நகராட்சி துவக்கப்பள்ளி, (2) ஆனந்தகிரி நகராட்சி துவக்கப்பள்ளி, (3) அப்சர்வேட்டரி நகராட்சி துவக்கப்பள்ளி ஆகிய மூன்று நகராட்சி தொடக்கப்பள்ளிகளுக்கு மேற்படி நிறுவனத்தாரால் காலை சிற்றுண்டி தயாரித்து வழங்கப்பட்டு வருகிறது. இந்த வேலை உத்தரவுக் காலம் 14.06.2024 உடன் ஓராண்டு காலம் நிறைவடைவதால் அதே ஒப்பந்த நிறுவனத்திற்கு அதே விலை விகிதப்படி தொடர்ந்து 6 மாத காலங்களுக்கு கால நீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **777, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 2)**

கொடைக்கானல் நகராட்சியில் 15-வது நிதிக்குழு பரிந்துரை நிதி 2023-24ன் கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பினை மாநில அளவிலான தமிழ் நாளிதழில் மற்றும் ஒரு ஆங்கில நாளிதழில் இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, சென்னை மூலம் அறிவிப்பு செய்த வகையில் நாளிதழ் கட்டணமாக கீழ்க்கண்ட விவரப்படி பட்டியல் தொகை செலுத்த கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் விபரம் | விளம்பர நிறுவனத்தின் விபரம் | பட்டியல் எண் மற்றும் நாள் | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 15 வது நிதிக்குழு பரிந்துரை நிதி 2023-24 | Graphic Arts Industries, Ramnagar, Coimbatore.<br>New Indian Express – Tamilnadu Edition Dinakaran<br>10.02.2024 | 1796 dt 10.02.2024 | **1,24,790/–** |

மேற்கண்ட தொகையினை நாளிதழ் நிறுவனத்திற்கு பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **778, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 3)**

கொடைக்கானல் நகராட்சியில் 15வது நிதிக்குழு பரிந்துரை நிதி 2023–24 ன் கீழ் புதியதாக JCB இயந்திரம் வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இயந்திரத்தில் சிறிய பக்கெட் இல்லாத காரணத்தினால் மழை நீர் வாய்க்கால்களில் படிந்துள்ள வண்டல் படிவுகளை அகற்றுவதில் சிரமமமாக உள்ளது. எனவே, இவ்வாகனத்திற்கு JCB Bucket, Cutter, Cutter Bolt, Bucket pin, Pin lock, Pin Sim, Greese Gun Nipple வாங்கிய வகையில் பட்டியலின்படி தொகை ரூ. 33,040/– (ரூபாய் முப்பத்து மூன்றாயிரத்து நாற்பது மட்டும் ) திரு.R.வாசுதேவன் இளநிலை உதவியாளரால் வழங்கப் பட்டுள்ளது. எனவே பட்டியலின்படி ( பட்டியல் எண். 010/2024–25 நாள். 14.03.2024 ) தொகை ரூ.33,040/– (ரூபாய் முப்பத்து மூன்றாயிரத்து நாற்பது மட்டும் ) யை திரு.R.வாசுதேவன் இளநிலை உதவியாளருக்கு வழஙகிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **779, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

******

**பொருள் எண் – 4)**

ஏப்ரல் மற்றும் மே 2024 மாதத்தில் பூம்பாறை, மன்னவனுார் மற்றும் கூக்கால் பகுதியில் வனப்பகுதில் காட்டு தீ பரவியதை தொடர்ந்து தலைமை செயலாளர் , நகராட்சி நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி, காட்டுத் தீயினை கட்டுப்படுத்திட நகராட்சி மூலம் வனப்பகுதியில் 15HP & 4HP மோட்டார்கள் பயன்படுத்தி காட்டுத் தீ அணைக்கப்பட்டது. காட்டுத் தீயினை அணைக்கும் பணியின் அவசர அவசியம் கருதி இப்பணியில் நகராட்சி 15HP & 4HP மோட்டார்களுக்கு தேவையான ஓஸ் மற்றும் உதிரி பொருட்கள், உள்ளுர் கடைகளில் வாங்கி பயன்படுத்தப்பட்டது. உள்ளுர் கடைகளில் வாங்கிய வகையில் பட்டியல் தொகை ரூ. 1,78,610/– (பட்டியல் எண்.769 நாள்.30.04.2024) இந்நகராட்சி இளநிலை பொறியாளர் திரு.பி.செல்லத்துரை அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகையினை தனக்கு வழஙகிட கோரி அசல் ரசீது இணைத்துள்ளார். எனவே, பட்டியலின்படி, இத்தொகையினை அன்னாருக்கு குடிநீர் நிதியின் மூலம் வழஙகப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி உள்ளுர் கடைகளில் பொருட்கள் வாங்கி பயன்படுத்தப்பட்டதற்கும், செலவினம் மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

| நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் : | 780, நாள். 27.06.2024 |
|---|---|
| | |
| நகர்மன்றத் தீர்மானம் : | அனுமதிக்கப்பட்டது. |

……

**பொருள் எண் – 5)**

கொடைக்கானல் நகராட்சியில் மூலதன மானிய நிதி 2021–22 ன் ஏரி மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளில் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் படகு குழாம் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த படகு குழாமில் தற்போது 55 எண்ணம் படகுகள் புதியதாக வாஙகப்பட்டுள்ளது. கோடை காலத்தில் அதிகப்படியான சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொள்ள வருகின்றனர். இதில் மரப்படகுகள் ஓர் ( துடுப்புகள்) அடிக்கடி உடைந்துவிடுவதினால், நிதி இழப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. எனவே, உதிரியாக 15 செட் துடுப்புகள் புதியதாக வாங்கி இருப்பு வைத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. புதிய துடுப்புகள் 15 செட் வாங்கியவகையில் செலவினம் தொகை ரூ.1,41,600/– இந்நகராட்சி இளநிலை பொறியாளர் திரு.பி.செல்லத்துரை அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகையினை தனக்கு வழஙகிட கோரி அசல் ரசீது இணைத்துள்ளார். (ரசீது எண். 021/20247–25 நாள்.29.04.2024) எனவே, பட்டியலின்படி, இத்தொகையினை அன்னாருக்கு பொது நிதியின் மூலம் வழஙகப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி புதிய துடுப்புகள் வாங்கி பயன்படுத்தப்பட்டதற்கும், செலவினம் மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

| நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் : | 781, நாள். 27.06.2024 |
|---|---|
| | |
| நகர்மன்றத் தீர்மானம் : | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் – 6)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இடஙகளில் உள்ள R.O Plant பழுதடைந்துள்ளது.

1. Naidupuram Air O Water Plant
2. Bryant park Air O Water Plant
3. Coaker’s walk plant
4. Bryant park Plant
5. Coak’ers walk park road plant
6. Moonjikkal Junction plant
7. Bus Stand outer plant
8. Bus Stand Inner plant
9. Silver Cascade Plant

தற்போது கோடை காலம் துவஙகியுள்ள நிலையிலும், பிளாஸ்டிக் பெட் பாட்டில்கள் தடைசெய்யப்பட்டுள்ளதாலும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய வேண்டியுள்ளதாலும், அவசர அவசியம் கருதி குடிநீர் நிதியின் கீழ் **<u>தமிழ்நாடு உள்ளாட்சி விதிகள் 2023 பிரிவு 56 ன்</u>** கீழ் பணிகள் செய்து முடிக்கப்பட்டது என்ற விபரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | செலவினத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான 9 இடஙகளில் உள்ள R.O Plant பழுதுகளை சரி செய்தல் | 1,29,033/– |

அலுவலக குறிப்பு.      அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **782, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

******

**பொருள் எண் – 7)**

இந்நகராட்சிக்கு சொந்தமான ஏரியை சுற்றி Fenching அமைக்கப்பட்டு தற்போது புதியதாக Fenching அமைக்கப்பட்டு வந்த நிலையில், பழைய Fenching பொருட்களை ஜிம்கானா பகுதியினை சுற்றி Fenching அமைக்க்கோரி சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் W.P.(MD)No.15985 of 2023 ன்படி வழக்கு தொடரப்பட்டதால் வழக்கறிஞர் கட்டணம் ரூ.15,000/-யை திரு.T.S.Mohamed Mohidheen அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **783, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 8)**

ஏப்ரல் மற்றும் மே 2024 மாதத்தில் பூம்பாறை, மன்னவனூர் மற்றும் கூக்கால் பகுதியில் வனப்பகுதில் காட்டு தீ பரவியதை தொடர்ந்து தலைமை செயலாளர் , நகராட்சி நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி, காட்டுத் தீயினை கட்டுப்படுத்திட நகராட்சி மூலம் வனப்பகுதியில் 15HP & 4 HP மோட்டார்கள் பயன்படுத்தி காட்டுத் தீ அணைக்கப்பட்டது. மேலும், நகராட்சியில் ஒரு குடிநீர் லாரிமட்டுமே இருந்த காரணத்தினார் நகரில் உள்ள வாடகை குடிநீர் லாரிகள் இரண்டு எண்ணம் வாடகைக்கு அமர்த்தப்பட்டு 1.5.2024 முதல் 5.5.2024 வரை பயன்படுத்தப்பட்டது. இதற்கான பட்டியல் தொகை ரூ. 1,00,000/– (பட்டியல் எண். 1634 மற்றும் 1635 நாள். 5.5.2024) இந்நகராட்சி குழாய் பொருத்துனர் திரு எஸ். பரமசிவன், அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தொகையினை தனக்கு வழஙகிட கோரி அசல் ரசீது இணைத்துள்ளார். எனவே, பட்டியலின்படி, இத்தொகையினை அன்னாருக்கு குடிநீர் நிதியின் மூலம் வழஙகப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு.
1) அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி உள்ளுர் கடைகளில் பொருட்கள் வாஙகி பயன்படுத்தப்பட்டதற்கும், செலவினம் மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **784, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் – 9)**

கொடைக்கானல் நகராட்சியில் **15**வது நிதிக்குழு பரிந்துரை நிதியின் மூலம் புதியதாக இரண்டு கழிவு நீர் வாகனங்கள் வாஙகப்பட்டுள்ளது. தற்போது கோடை காலம் என்பதினால் நகர் பகுதியில் குடிநீர் விநியோகம் செய்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. தற்போதுள்ள **1** குடிநீர் லாரியானது அடிக்கடி பழுதடைந்து விடுவதினால் அவசர காலஙகளில் மற்றும் நகரின் மேடான பகுதியில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத சூழ்நிலையில் தனியார் வாகனஙகள் வாடகைக்கு பயன்படுத்திட வேண்டியுள்ளது. எனவே, புதியதாக வாஙகப்பட்டுள்ள இரண்டு கழிவு நீர் ஊர்திகளில் ஒன்றை குடிநீர் லாரியாக மாற்றம் செய்திடலாம்.

மேற்கண்ட கழிவு நீர் லாரியினை குடிநீர் லாரியாக மாற்றம் செய்திட தேவையான மோட்டார், உதிரி பொருட்கள் , குழாய்கள் மற்றும் நடை மேடை போன்ற கூடுதல் பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி <u>தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி விதிகள் 2023 பிரிவு 56 ன்</u> கீழ் குடிநீர் நிதியின் மூலம் பணிகள் செய்து முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | செலவினத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Conversion of sullage lorry into water tanker lorry including Oil Engine, Platform and other materials with painting | 4,24,800/– |

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **785, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 10)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கே.ஆர்.ஆர். கலையரஙகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள படகு குழமானது தற்போது நவீனப்படுத்தப்பட்டு கண்காணிப்பு கேமராக்கள், நெட் ஒர்க் வசதிகள், கணணிகள் பொருத்தப்பட்டுள்ளது. கோடை காலத்தில் கூட்ட நெரிசலினை தவிர்க்கும் பொருட்டும், வசூல் பணியினை மேற்படுத்தும் பொருட்டும் வசூல் பணி மற்றும் வைப்புத் தொகை திரும்ப வழஙகிட தேவையான மென் பொருள் (Collection software for billing and Scanning for Deposit refund) தனியார் மென்பொருள் நிறுவனம் மூலம் உருவாக்கிடவும், ( Web application (centralized online app for Boat House operation, other services, Rower operation & Android App (Handheld mobile app with ticket printing operation for other service sms option based) தற்போது கோடை காலம் துவஙகியுள்ள நிலையில் வசூல் பணியினை துரிதப்படுத்திட வேண்டியுள்ளதாலும், அவசர அவசியம் கருதி <u>**தமிழ்நாடு உள்ளாட்சி விதிகள் 2023 பிரிவு 56 ன்**</u> கீழ் பணிகள் செய்து முடிக்கப்பட்டது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | செலவினத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 1) Developing of Web application (centralized online app for Boat House operation, other services, Rower operation).<br>2) Android App ( Handheld mobile app with ticket printing operation for other service sms option based in Boat House) | 17.70 (லட்சம்) |

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **786, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 11)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் லாரி TN57AY 9398 ஆனது **2012**ல் வாஙகப்பட்டதாகும். இவ்வாகனத்தின் தகுதி சான்று **14.06.2023** உடன் முடிவடைந்துவிட்டது. எனவே, இவ்வாகனத்தின் தகுதி சான்று பணிகளை அசோக் லைலாண்ட் உற்பத்தி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற பணிமனையான TVS பணிமனை, தேனியில் மேற்கொண்டு தகுதி சான்று பெற்றிடவும் அதற்கான செலவினத்தினை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை **1.40** இலட்சமாகும்.

அலுவலக குறிப்பு. **1)** அனுமதிக்கலாம்.
**2)** அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **787, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் – 12)**

இந்நகராட்சிக்கு சொந்தமான நட்சத்திர வடிவ ஏரியின் Weed harvesting machine பழுதடைந்துள்ளதால் உடனுக்குடன் சரிசெய்யப்பட வேண்டும் என்பதால் கொள்முதல் செய்யப்பட்ட M/s.Kelachandra Precision Engineers, Kottayam, Kerala விற்கு அனுப்பி பழுதுகள் சரிசெய்யப்பட்ட இயந்திரம் மீளப்பெறப்பட்டு பழுதுகள் சரி செய்த வகையில் ஆன செலவினம் ரூ.1,06,200/- திரு.பீ.செல்லத்துரை அவர்களால் செலவிடப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பதவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினம் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அன்னாருக்கு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **788, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 13)**

இந்நகராட்சிக்கு சொந்தமான படகு குழாமானது தற்போது நவீனபடுத்தப்பட்டு கணினிகள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், வசூல் பணியானது இன்டர் நெட் வசதி மூலம் மின்னனு இரசீது வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான இணையதள வசதி Ready Link நிறுவனம் மூலம் இணையதள சேவை 15.03.2024 முதல் 15.03.2025 வரை வழங்கப்பட்டமைக்கான செலவினம் ரூ.66,080/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு - 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இணையதள சேவைக்கான செலவினம் தொடர் செலவினம் என்பதால் (Recurring Expenditure) கேட்பின் அடிப்படையில் இனிவரும் காலங்களில் மாதாந்திர செலவினம் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.
3) நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றும் செலவினம் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம்.

| நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் : | 789, நாள். 27.06.2024 |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 14)**

15வது நிதிக்குழு பரிந்துரை நிதி 2023-24 ன் கீழ் கொடைக்கானல் நகராட்சிக்கு 2 எண்ணம் கழிவு நீர் லாரிகள் புதியதாக வாங்கப்பட்டு 1 லாரி மட்டும் குடிநீர் லாரியாக மாற்றப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சி கழிப்பறைகளில் உள்ள கழிவு நீரானது உறிஞ்சப்பட்டு பெரியகுளம் நகராட்சியில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையில் இறக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் நகர் பகுதியில் குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் கழிவு நீர் தொட்டியினை சுத்தம் செய்திட கோரி விண்ணப்பங்கள் வரபெற்றுள்ளன. கொடைக்கானல் நகராட்சியில் பாதாளச் சாக்கடை இல்லாத நிலையில் கழிப்பறைகளில் கழிவு நீர் தொட்டிகளில் கழிவுகள் சேகரிக்கப்படுகிறது. இவற்றை அப்புறப்படுத்திட தனியார் லாரிகள் மூலமே அதிக கட்டணத்தில் பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, பொதுமக்களின் நலன்கருதி, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நகராட்சி கழிவு நீர் லாரியினை பயன்படுத்திக் கொள்ள கீழ்க்கண்டவாறு கட்டணம் நிர்ணயம் செய்திடலாம்.

| வ.எண். | பயன்பாடு | நடை ஒன்றுக்கு கட்டணம் ரூ. |
|---|---|---|
| 1 | குடியிருப்பு ஒன்றுக்கு | ரூ. 6,000/- |
| 2 | வணிக பயன்பாடு கட்டிடம் | ரூ. 25,000/- |
| 3 | அரசு பயன்பாட்டில் உள்ள கட்டிடம் | ரூ.10,000/- |

மேற்கண்ட கட்டண விபரத்தில் பொதுமக்கள் நகராட்சி கழிவு நீர் லாரியினை பயன்படுத்திக்கொள்ள மன்றம் முடிவு செய்திடலாம்.

அலுவலக குறிப்பு. மேற்கண்ட கட்டணப்படி வசூலித்திட மன்றம் முடிவு செய்திடலாம்.

| நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் : | 790, நாள். 27.06.2024 |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 15)**

கொடைக்கானல் நகராட்சியில் மூலதன மானிய நிதி **2021–22** ன் ஏரி மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளில் ரூ.**300.00** இலட்சம் மதிப்பீட்டில் படகு குழாம் புதியதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த படகு குழாமில் தற்போது **55** எண்ணம் படகுகள் புதியதாக வாஙகப்பட்டுள்ளது. ஏற்கனவே, பழைய படகு குழாமில் **8** மரப்படகுகளும், **4** எண்ணம் பைபர் படகுகளும் பயன்பாட்டில் உள்ளது. தற்போது மொத்தம் **67** படகுகள் பயன்பாட்டில் உள்ளது. கோடை காலத்தில் அதிகப்படியான சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொள்ள வருகின்றனர். படகு சவாரி மேற்கொள்ளும் போது தரையில் மோதுவதினால் படகுகள் அடிக்கடி பழுதடைந்துவிடுகிறது. எனவே, கோடை காலத்தில் படகு சவாரி மேற்கொள்ள அதிகப்படியான சுற்றுலா பயணிகள் நகராட்சி படகு குழாமிற்கு வருகைப் புரிவதினால், நகராட்சியின் வருவாயினை பெருக்கும் நோக்கோடு , படகுகளின் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து இயக்கிட வேண்டிய கட்டாய சூழ்நிலை உள்ளது.

எனவே, படகுகளின் தேவையினை கருத்தில் கொண்டு, உடனுக்குடன் படகுகளின் பழுதுகளை சரி செய்து இயக்கிட வேண்டியுள்ளதால், உரிய நிறுவனஙகளிடம் இருந்து விலைப்புள்ளி பெற்று படகுகளின் பழுதுகளை பொது நிதியின் மூலம் **தமிழ்நாடு உள்ளாட்சி விதிகள் 2023 பிரிவு 56** ன் கீழ் பணிகள் செய்து முடிக்கப்பட்டது என்ற விபரம் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | செலவினத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான 62 படகுகளின் பழுதுகளை சரி செய்து இயக்குதல்.<br>**<u>Wooden Boat</u>**<br>FRB liquid ,Carpentering,New Oar ,Clamp Fittings<br>**<u>Fibre Boat</u>**<br>FRB liquid,Carpentering,Pedal repair with barring New Rudder | **9, 49,900/–** |

அலுவலக குறிப்பு. பதிவு செய்யலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **791, நாள். 27.06.2024** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 16)**

கொடைக்கானல் நகராட்சியின் வளர்ச்சி பணிகள் குறித்த விபரத்தினை பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் நாளிதழில் வெளியிட்டவகையில் நாளிதழ் நிறுவனங்களின் பட்டியல் தொகை கீழ்க்கண்ட விபரப்படி வழங்கிட கோரி பட்டியல் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | நாளிதழ் விபரம் | பட்டியல் எண் நாள் | தொகை |
|---|---|---|---|
| 1 | மாலை மலர் | DGL-D24050092 dt 17.05.2024 | 28586.00 |
| 2 | தினமலர் | -- dated 17.5.2024 | 42879.37 |
| 3 | மாலைமுரசு | AD24250277 DT 26.05.2024 | 42000.00 |
| 4 | தினசூரியன் | MA300310 dt 17.05.2024 | 31500.00 |
| 5 | தமிழக நியூஸ் | 40 dated 28.05.2024 | 27300.00 |
| 6 | தினமணி Express publications p ltd., | TN11365131 dt 25.05.2024 | 42000.00 |
| 7 | மக்கள் குரல் Newsmen Associates ltd., | 30416 dt 17.5.2024 | 31500.00 |
| 8 | Trinity Mirror | MDUTAB242500028 dt 23.5.2024 | 22575.00 |
| 9 | தின பூமி | 1415 dt 17.05.2024 | 29400.00 |
| 10 | தினமதி | ...d t 17.5.2024 | 39500.00 |
| 11 | மாலை தமிழகம் | MT 5232/2024-25 dt 21.5.2024 | 23100.00 |
| 12 | தமிழ் முரசு Kal Publications p ltd., | 3300485760 dt 17.5.2024 | 38812.20 |
| 13 | தினகாற்று KN Media | KNMS000531 dt13.05.2024 | 26880.00 |
| 14 | தினத்தந்தி | 2425DGL231021885 DT 17.5.2024 | 48510.00 |

வரபெற்ற நாளிதழ் நிறுவனங்களின்படி, பட்டியல் தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **792, நாள். 27.06.2024** |
|---|---|
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 17)**

கொடைக்கானல் நகராட்சி-நகராட்சி எல்லைக்குள் வருகை தரும் சுற்றுலா பயணிகள் மற்றும் வணிக ரீதியாக வருபவர்களுக்கு epass நடைமுறைப்படுத்த வேண்டுமென சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P.No.15120/2019 மற்றும் WMP.No.15112/2019, 31629/2023ல் 22.04.2024 மற்றும் 29.04.2024ம் தேதிகளில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ந.க.எண்.5091/2022/அ7, நாள்.06.05.2024ன் மற்றும் ந.க.எண்.957194/2023/F5, நாள். .07.2023ன் விலை விகித்த்தின்படி பணியாளர்களை பணிக்கு அமர்த்தி epass பணியை மேற்கொள்ளவும் (உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி epass முறையை உடன் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் கருதி உடன் பணிகள் கொண்டதையும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியின் மூலம் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **793, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 18)**

கொடைக்கானல் நகராட்சிக்கு படகு குழாம் மற்றும் கோக்கர்ஸ் வாக் பகுதியில் வசூல் பணி மற்றும் இதர பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால் ஒப்பந்ததாரர் மூலம் பணியாளர்கள் நகர்மன்ற தீர்மானம் எண். 754 நாள். 08.03.2024 ன் படி தற்காலிகமாக மூன்று மாதங்களுக்கு பணிமேற்கொள்ளப்பட்டது. (08.03.2024 முதல் 07.06.2024 வரை) . ( கணணி இயக்குதல், வைப்புத் தொகை திரும்ப வழங்குதல், படகு ஏற்றுதல், இரவு காவலர், கழிப்பறை சுத்தம் செய்தல், கண்காணிப்பாளர், படகுகளை சுத்தம் செய்தல் மற்றும் கோக்கர்ஸ்வாக் வசூல் பணி ). 07.06.2024 உடன் ஒப்பந்த காலம் முடிவடைவதினால் மேலும் மூன்று மாதங்களுக்கு நகர்மன்றத் தீர்மானம் 754 நாள். 08.03.2024 ல் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில் காலநீட்டிப்பு செய்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. 1) அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **794, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 19)**

கொடைக்கானல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணியில் நகர் பகுதியில் குப்பைகளை சேகரித்து குப்பை கிடங்கிற்கு எடுத்துச் செல்ல இராமநாதபுரம் நகராட்சியில் இருந்து Compactor Lorry வாங்கப்பட்டுள்ளது. இந்த லாரியில் குப்பைகளை சேகரித்து ஏற்றிட நகர் பகுதியில் ஆங்காங்கே Compactor bin வைத்திட வேண்டியுள்ளது. இந்த வாகனம் முதன் முறையாக கொடைக்கானல் நகர் பகுதியில் பயன்படுத்தப்படுவதினால் குப்பை சேகரிப்பு தொட்டிகள் நகராட்சியில் இல்லை. எனவே, இவ்வாகனத்தின் பயன்பாட்டிற்கு நகரின் முக்கிய பகுதிகளில் Compactor bin வைத்திட 19 எண்ணம் பொது நிதியின் மூலம் புதியதாக வாங்கி கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ. 10.00 இலட்சம்ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **795, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 20)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான 3, 6, 9 மற்றும் 21 ஆகிய வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு பிரதான குழாய்கள் அமைக்கப்படாமல் உள்ள கீழ்க்கண்ட பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்க வேண்டியுள்ளது. குடிநீர் பகிர்மான குழாய்கள் இல்லாத காரணத்தினால் இப்பகுதி குடியிருப்புகளுக்கு நகராட்சியால் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க இயலாத நிலையில் உள்ளது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | செல்லபுரம் குடிநீர் தொட்டியில் 20 எச்.பி. மின்மோட்டார் பொருத்தி வைடிரா காம்பவுண்ட் வரை குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல் | 19.60 |
| 2 | நாயுடுபுரம் சந்திப்பு முதல் வில்பட்டி சாலை மற்றும் பச்சை மரத்து ஓடை பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல். | 9.80 |
| 3 | அப்சர்வேட்டரி வி.ஜி.பி. அருகில் உள்ள என்.ஆர். காம்பவுண்ட் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல். | 17.40 |
| 4 | ஆனந்தகிரி 4வது தெரு -7வது தெரு இடைப்பட்ட பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய்கள் பதித்தல் | 9.70 |

எனவே, மேற்கண்ட விவரப்படி குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிப்பதற்கு குடிநீர் நிதியின் மூலம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **796, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 21)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட இடங்களில் பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு நலன் கருதி பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு பொது நிதியின் கீழ் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ஆனந்தகிரி 4-வது தெருவில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் அருகில் சாலையின் குறுக்கே சிறு பாலம் மற்றும் மழை நீர் வாய்க்கால் அமைத்தல் | 9.40 |
| 2 | இந்திரா நகர் பகுதியில் தடுப்பு சுவர் அமைத்தல் | 9.80 |
| 3 | கூலிகாட் சாலையில் சிமிண்ட் சாலை மற்றும் தாங்கு சுவர் அமைத்தல் | 9.50 |
| 4 | தந்திமேடு பகுதியில் சிமிண்ட் சாலை மற்றும் தாங்கு சுவர் அமைத்தல் | 9.70 |

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **797, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 22)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான சுங்கசாவடியில் அரசாணை (டி) எண்.12, நெடுஞ்சாலை (ம) சிறு துறைமுகங்கள் (எச்.எஸ்.1) துறை, நாள்.23.01.2023-ன் படி நுழைவுகட்டணம் வசூல் செய்யும் உரிமம் 23.1.2023 முதல் 14.06.2024 வரை அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மேற்கண்ட அரசாணை 14.06.2024 உடன் முடிவடைவதால் 13.06.2024 அன்று நுழைவு கட்டண குழு கூட்டம் திண்டுக்கல் மாவட்ட ஆட்சிதலைவர் (ம) நுழைவுகட்டண குழு தலைவர் அவர்களால் நடத்தபட்டது. மேற்கண்ட நுழைவு கட்டண குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட இரண்டு கூட்ட பொருள்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில்,ஒப்புதல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**<u>கூட்ட பொருள் 1.</u>** 15.06.2024 முதல் அடுத்த மூன்றாண்டுகளுக்கு கீழ்கண்டவாறு உயர்வு செய்யபட்டது.

| வ. எண் | வாகன வகை | தற்போது வசூலிக்கப்படும் தொகை ரூ. | உயர்வு செய்யப்படும் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | சுற்றுலாப் பேருந்து | 250/- | 300/- |
| 2 | பேருந்து | 150/- | 200/- |
| 3 | லாரி (கனரக வாகனங்கள்) | 100/- | 150/- |
| 4 | மேக்ஸிகேப், மினி லாரி, வேன், டிராக்டர் | 80/- | 100/- |

| | | | |
|---|---|---|---|
| 5 | சுற்றுலா சீருந்து, வாடகை சிற்றுந்து, சுமோ, குவாலிஸ், மற்றும் டிராக்ஸ் உட்பட) | 60/- | 80/- |
| 6 | சீருந்து அல்லது ஈப்பு | 60/- | 80/- |
| 7 | மூன்று சங்கர வாகனங்கள் / இரண்டு சக்கர வாகனங்கள் | இல்லை | இல்லை |

<u>கூட்ட பொருள் 2.</u> கொடைக்கானல் நகராட்சி நுழைவு கட்டண வரவு செலவிற்கு புதியதாக தோற்றுவிக்கபட்ட கணக்கிலிருந்து செலவு செய்து கொள்ளவும் பழைய கணக்கிலிருக்கும் தொகையினை புதிய கணக்கிற்கு மாற்றம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

எனவே மேற்கண்டவாறு நுழைவு கட்டண குழு கூட்டத்தில் அனுமதிக்கப்பட்ட கட்டண உயர்விற்கும், தொகை மாற்றத்திற்கும் உரிய அனுமதி கோரி நகர்மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கபடுகிறது.

அலுவலக குறிப்பு: நுழைவு கட்டணம் உயர்வு செய்து உரிய விதிமுறைகளின்படி வசூல் செய்யவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **798, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | 1. அனுமதிக்கப்பட்டது.<br>2. உயர்வு செய்யப்பட்ட நுழைவுக் கட்டணம் வசூலிப்பதற்கும் ஏற்கனவே நடைமுறையில் உள்ளவாறு கொடைக்கானல் தாலுகாவிற்குட்பட்ட அனைத்து வாகனங்களுக்கும் நகராட்சி அனுமதி பெற்று நுழைவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கவும் பிரேரனை அனுப்ப அனுமதிக்கப்பட்டது. |

**பொருள் எண் – 23)**

கொடைக்கானல் நகராட்சியில் 15வது நிதிக்குழு பரிந்துரை நிதி 2023-24ன் கீழ் புதியதாக 2 எண்ணம் கழிவு நீர் லாரிகள் வாங்கப்பட்டு ஒரு லாரி குடிநீர் லாரியாக மாற்றப்பட்டுள்ளது. கழிவு நீர் லாரியின் மூலம் நகராட்சி குடியிருப்பு பகுதிகளில் கழிவு நீர் ஏற்றுவதற்கு போதுமான Hose இல்லாமல் உள்ளது. எனவே, கழிவு நீர் லாரிக்கு புதியதாக உறாஸ் , ஜாய்ண்ட் கம்பிளிங், கிளிப், 90 மீட்டர் பொது நிதியின் மூலம் வாங்கிக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம்) ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **799, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 24)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான JCB இயந்திரத்தில் சாலையினை தோண்டுவதற்கான Demolisher இல்லாமல் உள்ளது. சாலைகள் மற்றும் மழை நீர் கால்வாய்களில் மேல் உள்ள கான்கிரிட் மூடிகளை மழைக்காலங்களில் அப்புறப்படுத்தி சாலை மற்றும் மழை நீர் கால்வாய்கள் சிறுபாலங்களில் உள்ள அடைப்புகளை சுத்தம் செய்வதற்கு JCB இயந்திரத்திற்கு Virbrator Demolisher & Base Plate பொது நிதியின் மூலம் பொருத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 7.50 இலட்சம் ஆகும்.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **800, நாள். 27.06.2024** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம்** : | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/-பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.